## கீழக்கரை நகராட்சி

**கீழக்கரை நகராட்சியில் மன்ற அவசரக் கூட்டம்** 20.05.2022 **ஆம் தேதி** வெள்ளிக்கிழமை கிழமை காலை 11.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**பொருள் : 1**

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறை நாள்.30.03.2022 –ன் படி கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 21 வரையிலான அனைத்து குடியிருப்பு பயன்பாட்டு கட்டடங்கள், வணிக பயன்பாட்டு கட்டடங்கள், தொழிற்சாலை கட்டடங்கள், சுய நிதி பள்ளி கல்லூாரி கட்டடங்கள் மற்றும் காலிமனைகள் ஆகியவற்றிற்கான அடிப்படை மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை இந்நகர்மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண்.22 நாள்.11.04.2022–ன் படி கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்து வரி/காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள இந்நகர்மன்றம் அனுமதிக்கப்பட்டது. மேலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை 4–ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரஙகளின் கீழ் கீழக்கரை நகராட்சிக்கு செலுத்தப்படும் சொத்து வரியினை 01.04.2022 முதல் சொத்து வரி/ காலிமனை வரி பொது சீராய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டு இவ்வறிக்கையினை தினகரன்,தமிழ்சுடர் ஆகிய தமிழ் நாளிதழில்களிலும் மற்றும் ட்ரைனிட்டி மிரர் ஆகிய ஆஙகில நாளிதழ்களிலும் 13.04.2022–ம் தேதியன்று பிரசுரம் செய்யப்பட்டது. மேலும் இதுகுறித்து இந்நகர் பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் இவ்வறிப்பு வெளியிட்ட 30 தினஙகளுக்குள் எழுத்துப்பூர்வமாக நேரிலோ தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ நகராட்சி ஆணையாளருக்கு தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. தற்போது 30 நாட்கள் கால அவகாசம் முடிவடைந்த நிலையில் இதுவரை பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை மனுக்கள் ஏதும் வரப்பெறவில்லை என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 21 வரையிலான சொத்துவரி/காலிமனை வரி பொது சீராய்வு செய்வதற்கு அரசாணையின் பிரகாரம் தற்போது உயர்த்தப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பிற்கு ஊர்ஜிதம் செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. இப்பதிவினை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.: 23**

கீழக்கரை நகராட்சி வார்டு எண்.1, 18 மன்ற உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர். 1, 2, 4, 10, 15, 18 மற்றும் 20 வது வார்டு உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர். தமிழ்நாடு அரசின் கொள்கையின்படியும், நகராட்சி நிதிநிலைமையினை கருத்தில் கொண்டு பெருபான்மை வைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.